தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தமிழகத்தில் பரவலாக இன்று மழை பெய்ய வாய்ப்பு**



தமிழகத்தின் உள் மாவட்டங்கள், தென்மேற்கு மாவட்டங்களில் புதன்கிழமை (ஆக.20) பரவலாக மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென்மேற்கு பருவமழை காரணமாக தமிழகத்தின் தென்மாவட்டங்கள் உள்பட மேலும் சில பகுதிகளில் மழை பெய்து வருகிறது. இதுபோல் புதன்கிழமையும் தமிழகத்தின் தென்மேற்கு மாவட்டங்கள், உள் மாவட்டங்களில் மழையோ, இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் சில பகுதிகளில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**செவ்வாய்க்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லிமீட்டரில்):**

திருப்பூர் மாவட்டம் மூலனூரில் செவ்வாய்க்கிழமை அதிகபட்சமாக 150 மில்லி மீட்டர் மழை பெய்தது. இதுபோல், திருப்பத்தூர் -110, வாடிப்பட்டி, சத்திய மங்கலம் - 100, விருதுநகர், பாலக்கோடு -90, பவானிசாகர், பாடலூர், உடுமலைப்பேட்டை, திருச்சி விமான நிலையம் -80, பாபநாசம், கொடைக்கானல் -

70, திருபுவனம், காங்கேயம், நத்தம் -60, வால்பாறை, அரண்மனைபுதூர் (தேனி மாவட்டம்), தொழுதூர், பெரம்பலூர், சமயபுரம், மதுரை விமான நிலையம் -50 மில்லி மீட்டர் அளவில் மழை பதிவாகியுள்ளது. மேலும் திருவண்ணாமலை, வேலூர், சேலம், தருமபுரி, பெரம்பலூர், திருச்சி, ஈரோடு, கரூர், கோவை, மதுரை, சிவகங்கை, விருதுநகர், தேனி, உள்ளிட்ட தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை மழை பெய்துள்ளது.

**செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):**

சென்னை உள்ளிட்ட கடலோர மாவட்டங்களில் வெப்பநிலை 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்குக் குறைவாக பதிவானாலும், இந்த மாவட்டங்களில் செவ்வாய்க்கிழமை வெயிலின் தாக்கம் இயல்பை விட அதிகமாக இருந்தது.

சென்னை -92, கோவை -91, காரைக்கால் -100, கரூர் பரமத்தி -97, மதுரை விமான நிலையம் -93, பாளையங்கோட்டை -98, திருச்சி -96, வேலூர் -94.

குறைந்த நீரில் கூடுதல் மகசூல் தரும் பயிர் ரகங்களை உருவாக்க வேண்டும்

**<u>குறைந்த நீரில் கூடுதல் மகசூல் தரும் பயிர் ரகங்களை உருவாக்க வேண்டும்</u>**




தமிழகத்தில் வரும் 2025-இல் 31 சதவீதம் தண்ணீர் பற்றாக்குறை நிலவும் என வல்லுநர்கள் தெரிவிப்பதால், குறைந்த நீரில், குறைந்த நிலப் பரப்பில் அதிக மகசூல் தரும் பயிர் ரகங்களை கண்டுபிடிக்க வேண்டும் என வேளாண்மைத் துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வலியுறுத்தினார். மதுரை வேளாண்மைக் கல்லூரி, ஆராய்ச்சி நிலையத்தின் 50-ஆம் ஆண்டு பொன்விழாவில் அவர் பேசியது:

எதிர்காலத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பின் காரணமாக பருவநிலை மாற்றம் ஏற்படும். இதன் காரணமாக, மழைப் பொழிவு மாற்றத்துக்குள்ளாகும். அப்போது,

தமிழகத்தில் 2025-ஆம் ஆண்டில் தண்ணீர் பற்றாக்குறை இருக்கும் என வல்லுநர்கள் மதிப்பிட்டுள்ளனர். அதிகரித்துவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியை இரண்டு மடங்காகவும், விவசாயிகள் வருமானத்தை மும்மடங்காகவும் அதிகரிக்க வேண்டும் என்பதே தமிழக முதல்வரின் லட்சியம். தற்போது விளைநிலங்களின் பரப்பளவு குறைந்து வருகிறது. மக்கள்தொகை ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், குறுகிய காலத்தில் குறைந்த பரப்பளவில் இரண்டு மடங்கு உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதற்கான முயற்சிகளை வேளாண் பல்கலை. மாணவர்கள் மேற்கொள்ள வேண்டும். வறட்சி நிலவும் பெரியாறு-வைகை பாசனப் பகுதிகளுக்கு ஏற்ற நெல் ரகங்களை உருவாக்கும் ஆய்வுகளை மதுரை வேளாண் கல்லூரி தொடர்ந்து வருகிறது. இதுவரை வெளியிடப்பட்ட மதுரை} 5 நெல் ரகம் தற்போது மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. காய்கறிப் பயிர்களில் வெண்டை, கத்தரி, புடலங்காய், பாகல், மிளகாய் ஆகியவற்றில் ஒரு ரகத்தையும், சிப்பிக் காளான் வகையில் இரண்டு ரகமும், பசுந்தாள் உரமான கொளுஞ்சியில் ஒரு ரகமும், உளுந்தில் ஒன்றும், இக் கல்லூரி மாணவர்களால் ஆய்வுசெய்து வெளியிடப்பட்டது பாராட்டுக்குரியது. தமிழக முதல்வர் அறிவித்த மூன்று வேளாண்மைக் கல்லூரிகளும் இன்னும் ஒரு வாரத்தில் தொடங்கப்படவுள்ளன. திருவண்ணாமலை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் வேளாண்மை கல்லூரிகள் மாணவர் சேர்க்கை முடிக்கப்பட்டு தயாராக உள்ளது. மதுரை வேளாண்மைக் கல்லூரி பொன்விழாவையொட்டி, மாணவ மாணவியர் தங்கும் விடுதி ரூ.2 கோடியிலும், உயிர் மரபியல் ஆய்வுக்கூடம் ரூ.15 கோடியிலும், புதுமையான ஆராய்ச்சிக்கு ரூ.8.56 கோடி மதிப்பீட்டிலும், வணிக வளாகம் ரூ.3 கோடியிலும் கட்ட தமிழக முதல்வர் சிறப்பு நிதிகளை ஒதுக்கியுள்ளார். இப் பணிகள் விரைவில் தொடங்கும் என்றார் அமைச்சர். மதுரை வேளாண் கல்லூரியின் பொன் விழாவையொட்டி, சிறப்பு அஞ்சல் தலையை சென்னை மண்டல அஞ்சல் துறைத் தலைவர் மெர்வின் அலெக்ஸாண்டர் வெளியிட, அதைப் பெற்றுக் கொண்ட அமைச்சர்கள் செல்லூர் ராஜு, அக்ரி கிருஷ்ணமூர்த்தி.

**<u>அமராவதி அணையில் நீர் திறப்பு அதிகரிப்பு:விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

குறுவை நெல் சாகுபடிக்காக உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையில் இருந்து சென்று கொண்டிருந்த 250 கன அடி தண்ணீர் 350 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில வாரங்களாக பலத்த மழை பெய்து வந்தது. இதனால், அணையின் நீர்மட்டம் மள, மளவென உயர்ந்து வந்தது. இதைத் தொடர்ந்து கடந்த ஒரு மாதத்தில் மட்டும் குடிநீருக்காக நான்கு முறை அணை திறந்து விடப்பட்டது. மேலும் புதிய ஆயக்கட்டு பாசன நிலங்களுக்கு 15 நாள்களாக உயிர்த் தண்ணீர் விடப்பட்டது. இதன் பிறகு பழைய ஆயக்கட்டு நிலங்களுக்கு அதாவது 8 ராஜவாய்க்கால்களுக்கு ஆகஸ்ட் 7-ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் உடுமலை, தாராபுரம் வட்டங்களில் 7,250 ஏக்கர் பழைய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இந்நிலையில், அமராவதி ஆற்றின் மூலம் சென்று கொண்டிருந்த 250 கனஅடி நீர் செவ்வாய்க்கிழமை மதியம் 1 மணி அளவில் 350 கன அடியாக உயர்த்தப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அணையின் நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் செவ்வாய்க்கிழமை காலை 7 மணி நிலவரப்படி 63.34 அடி நீர் இருப்பு காணப்பட்டது. 4,035 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் 1,148.58 மில்லியன் கன அடி நீர் இருப்பு இருந்தது. அணைக்கு உள்வரத்தாக 450 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து 364 கன அடி நீர் வெளியேறிக் கொண்டிருந்தது.

## <u>தக்காளி நடவு: வேளாண் கல்லூரி மாணவியர் செயல்விளக்கம்</u>

வேளாண் பல்கலைக்கழக மாணவியர், விவசாயிகளுக்கு தக்காளி நடவு செய்வது குறித்து திங்கள்கிழமை செயல்விளக்கம் அளித்தனர். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவியர் சந்தியா, கிருத்திகா, யவன காவியா, நஸ்ரின், சலோமி, நர்மதா, மதுபிரியங்கா, லிகிதா, யாழினி, செந்தமிழ் செல்வி ஆகியோர் மூன்று மாதங்களாக களப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதில் ஒரு பகுதியாக, ராம்நகரில் குழித்தட்டு முறை தக்காளி நடவு பற்றி செயல்விளக்கம் அளித்தனர். இந்தத் தொழில்நுட்பம் மூலமாக விதையளவு குறையும், நோயற்ற சீரான வளர்ச்சியுடைய நாற்றுக்களை நட முடியும். இதனால் மகசூல் அதிகரிக்கும்.

இந்தத் தொழில்நுட்பத்தை தக்காளிக்கு மட்டுமன்றி மஞ்சள் மற்றும் அனைத்து காய்கறி பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். இதில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ராஜஸ்ரீ, அட்மா தொழில்நுட்ப மேலாளர் தனப்ரியா ஆகியோர் பங்கேற்றனர்.

## கால்நடை முகாமில் 2165 கால்நடைகளுக்கு சிகிச்சை

திருமானூர் அருகே அண்மையில் நடைபெற்ற கால்நடை சிகிச்சை முகாமில் 2165 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. திருமானூர் அருகேயுள்ள முனியங் குறிச்சி கிராமத்தில் தமிழக அரசின் சிறப்பு கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குநர் டாக்டர் செல்வபெருமாள் தலைமையில் நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் ராமநாதன் முகாமை தொடங்கிவைத்தார். இதில் 22 கால்நடைகளுக்கு பொது சிகிச்சையும், 17 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 30 பசுமாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும், 925 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், 243 மாடுகளுக்கு சப்பை நோய் தடுப்பூசியும், 928 ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசியும் போடப்பட்டன. நிகழ்ச்சியில் சிறந்த முறையில் வளர்க்கப்பட்ட 5 கிடேரி கன்றுகளுக்கு பரிசு வழங்கப்பட்டது.

## மாரண்டஹள்ளியில் அதிகபட்ச மழை

தருமபுரி மாவட்டத்தில் அதிகபட்சமாக மாரண்டஹள்ளியில் திங்கள்கிழமை 92 மி.மீட்டர் மழை பதிவாகியது. தருமபுரி மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் திங்கள் கிழமை இரவு பலத்த மழை பெய்தது. இதன் காரணமாக சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்ததுடன், தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கியது. நீண்ட நாள்களுக்குப் பிறகு பெய்த பலத்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்தனர். மாவட்டத்தில் பெய்த மழை அளவு (மி.மீட்டரில்): தருமபுரி 1.60, ஆட்சியரகம் 3, பாலக்கோடு 87, அரூர் 35.20, பாப்பிரெட்டிப்பட்டி 1.20, ஒகேனக்கல் 1.40, மாரண்டஹள்ளி 92.

## பெங்களூருவில் ஆகஸ்ட் 22- முதல் வேளாண் வணிகக் கண்காட்சி

பெங்களூருவில் வேளாண் வணிகக் கண்காட்சி வருகிற 22-ஆம் தேதி தொடங்குகிறது. இதுகுறித்து கண்காட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஜாப்பர்நக்வி செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது: பெங்களூரு பன்னாட்டு கண்காட்சி வளாகத்தில் வருகிற 22-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை 3 நாள் வேளாண் வணிகக் கண்காட்சி நடைபெறுகிறது. இதில் பல நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்கின்றனர். இந்தக் கண்காட்சி மூலம் இந்திய விவசாயி களுக்கு தங்கள் விளைவித்த பொருகளை வணிகம் செய்வதற்கான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். மத்திய, மாநில அரசுகளின் நலத் திட்டங்கள் குறித்து விவசாயி களுக்கு விவரிக்கப்படும். கண்காட்சியில் விவசாயம் மட்டுமன்றி உணவுப் பொருள்

களின் வணிகத்திற்கு உதவும் வகையில் பல கருத்தரங்கங்கள் நடைபெற உள்ளன. கண்காட்சிக்கு கர்நாடக அரசு முழு ஒத்துழைப்பு, ஆதரவு அளிப்பதாக உறுதி யளித்துள்ளது. கண்காட்சியில் பங்கு கொள்ள மாநில அரசே 40 ஆயிரம் விவசாயி களின் பெயர்களைப் பதிவு செய்தது. இலவச நுழைவுக் கட்டணம் உள்ள இந்தக் கண்காட்சியில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும். கடந்த ஆண்டு நடைபெற்ற கண்காட்சியில் 38 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். நிகழாண்டு அதிக அளவில் விவசாயிகள் கண்காட்சியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>சொட்டு சொட்டாய் தண்ணீர்... கொத்து கொத்தாய் மாங்காய்...</u>**



வானத்தை பார்த்து வாழ்ந்து கொண்டே இருந்தால் மண் எப்போது மணம் வீசுவது? மண்வளம் பெற உயிர்நீர் தேவைதான். அந்த உயிர் நீரை சொட்டுநீர்ப்பாசனமாய் தந்ததால், அலங்காநல்லூர் கோடாங்கிபட்டி மகாராஜனின் ஆறுஏக்கர் தோட்டத்தில் மாமரங்கள் அணி அணியாய் காய்க்குத் தொங்குகின்றன. அடிக்கும் வெயிலில் இலைகள் தாக்கப்பிடிப்பதே அதிசயமாக இருப்பதால், இங்கு கொப்பும், கிளையுமாய் காய்கள் தான் கூட்டங்களாக காணப்படுவது, ஆச்சரியம் தருகிறது. காலாப்பாடு, கல்லாமை, காசாலட்டு, ருமேனியா, பாலாமணி, பங்கனபள்ளி, அல்போன்சா ரகங்களின் 120 மரங்கள்,

ஆங்காங்கே வரிசைகட்டி நிற்கின்றன. ஆறு ஏக்கரிலும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்து, சாதித்துள்ளார் விவசாயி மகாராஜன். தொட்டவுடனே சாதிக்கவில்லை. தோல்வி தந்த பாடம் தான், சாதிக்கத் தூண்டியது என்கிறார். ஏற்கனவே ஆறு ஏக்கரில் தென்னந்தோப்பு உள்ளது. தோட்டக்கலை அதிகாரி திருமுருகு, " 5 எக்டேர் வரை அரசு மானியத்துடன் சொட்டுநீர் பாசனம் அமைக்கச் சொல்லும் போதெல்லாம்', "இதெற்கு... காசை கரியாக்கவா' என்று விட்டுவிட்டேன். தண்ணீரின்றி தென்னை கருகிப் போனது. ஆறுஏக்கர் மாந்தோப்பிற்கு ஆழ்துளை கிணறு அமைத்து, மின்மோட்டார் மூலம் வாய்க்கால் வழியாக தண்ணீர் பாய்ச்சினேன். முதலில் தண்ணீர் ஊற்றிய மரத்திற்கு, மீண்டும் தண்ணீர் கிடைக்க ஒருவாரமானது. மீண்டும் சொட்டுநீர் பாசனம் பற்றி கூறியதும், முயற்சித்துத் தான் பார்ப்போமே என்று சம்மதம் சொன்னேன். ஆறு ஏக்கர் வரை சொட்டுநீர்ப் பாசனம் அமைக்க, அரசே மானியம் தந்தது. கொஞ்சம் கூடுதலாக செலவு செய்து சொட்டுநீர் கருவிகளை அமைத்தேன். மின்மோட்டார் மூலம் உரம் தண்ணீரில் கலக்க தனி ஏற்பாடு செய்தேன். தற்போது ஆறு ஏக்கருக்கும் ஒன்றரை மணி நேரத்தில் தண்ணீர் கிடைத்து விடுகிறது. மின்செலவு குறைந்துள்ளது. களைகள் குறைந்து விட்டன. கிடைக்கும் கொஞ்சம் தண்ணீரில் மரங்கள் நன்றாக காய்த்து, மகசூலும் கிடைத்தது. மா மட்டுமல்ல... ஓராண்டுக்கு முன் கொய்யாவில் லக்னோ 49 ரகத்தில் 300 மரங்கள் வைத்து, பராமரித்து வருகிறேன். மாட்டு எரு, உரம் தருகிறேன். வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்சியபோது, மரத்திற்கு ஒரு டன் காய்கள் தான் கிடைத்தன. இப்போது சொட்டு நீர் பாசனம் மூலம் மரத்திற்கு மட்டுமே தண்ணீர் கிடைப்பதால், இரண்டு டன் காய்கள் கிடைக்கின்றன. மழை பெய்தால் இன்னும் மகசூல் கிடைக்கும்.சொட்டுநீர் பாசனம் அமைத்ததால், ஆறு ஏக்கர் விவசாயத்தை காப்பாற்ற முடிந்தது, என்றார். இவரிடம் பேச: 97867 51903.

எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை

## நவீன தொழில்நுட்பம்



**ஒட்டு கத்தரி தொழில்நுட்பம் :**ஒட்டுக்கத்தரி என்பது கத்தரியின் இனச்செடியான சுண்டைக்காய் செடியை வேர்ச் செடியாகவும், நமக்கு தேவையான கத்தரி இனத்தை தேர்வு செய்து அதிலிருந்து இளம்தளிர் தண்டினை எடுத்து ஒட்டுச் செடியாகவும் வைத்து இணைப்பதே ஒட்டுக்கத்தரி என்பதாகும். சுண்டைக்காய் செடி அதிக ஆண்டுகள் வளரும் தன்மையைக் கொண்டது. பூச்சிகள், நோய்கள், நூற்புழுக்களின் தாக்குதலையும் தாங்கி வளரும் தன்மை உடையது. இளம்தளிர் ஒட்டுக்கன்றுகளை அதிக அளவு விளைச்சலை தரவல்ல செடிகளின் இரகங்களின் விதைகளை விதைத்து அதிலிருந்து இளம்தளிர் குச்சி தேர்வு செய்யப்படுகிறது.

**வேர்ச்செடி தயாரிப்பு :** சுண்டைக்காய் விதைகளை 4 சதம் பொட்டாசியம் நைட்ரேட் கரைசலில் 24 மணி நேரம் ஊறவைத்து பின்பு மேட்டுப்பாத்திகளில் விதைக்க வேண்டும். சுண்டைக்காய் விதையை விதைத்த நார்களிலிருந்து 10 நாட்களுக்கு பிறகு நாற்றங்காலில் விதைக்க வேண்டும். விதைத்த 25 நாட்களுக்கு இது ஒட்டுக்கட்டுவதற்கு ஏற்ற தடிமனுடன் இருக்கும்.

**ஒட்டுக்கட்டுதல்:** வேர்க்குச்சியும், இளம்தளிர் குச்சிகளும் நான்கு இலைகள் விட்ட நிலையில் வேர்ச்செடியின் மேல் பகுதியை 10 செ.மீ. உயரத்தில் கூர்மையான சுத்தமான கத்தியைக் கொண்டு நீக்கி விட்டு, நீளவாக்கில் ஒரு சிறு பிளவு ஏற்படுத்த வேண்டும். பின்னர் அதே பருமனுடன் இளந்தளிர் குச்சியின் வேரை நீக்கி விட்டு தண்டின் இலைகளை இரு நுனியிலைகள் மட்டும் விட்டு விட்டு இதர இலைகளை நீக்கி விட வேண்டும். பின் "ஏ' வடிவத்தில் இருபுறமும் சீவி வேர்க்குச்சியின் பிளவுபட்ட பகுதியில் நுழைத்து பிளாஸ்டிக் இணைப்பான்

கொண்டு இணைக்க வேண்டும். அல்லது ஒரு செ.மீ. அகலமான சிறு பாலிதீன் தாளைக் கொண்டு இறுக்கமாகச் சுற்றி கட்டி விட வேண்டும். பின்னர் ஒட்டுக் கட்டிய செடிகளை ஒரு சிறு பாலிதீன் உறையை கொண்டு நுனியை மூடி நிழல்வலைக் கூடத்தினுள் சுமார் 70-80 சதவிகிதம் ஈரப்பதம் இருக்குமாறு எட்டு நாட்கள் வைக்க வேண்டும். பிறகு உறையை எடுத்து விட்டு 10-15 நாட்கள் நிழல்வலைக்குடிலில் வைக்க வேண்டும். ஒட்டு இணைத்த பிறகு 10 நாட்கள் வெளிசூழலில் வைத்து ஒட்டு செடிகளை நடவு வயலில் நடலாம். நடவு செய்யப் படும் நிலத்தை 4-5 முறை நன்றாக உழ வேண்டும். கடைசி உழவின்போது எக்டருக்கு 25 டன் மக்கிய தொழுஉரமிட்டு நன்கு கலக்க வேண்டும். ஒட்டுகத்தரி செடிக்கு 200 கிலோ தழைச்சத்து, 200 கிலோ மணிச்சத்து, 100 கிலோ சாம்பல் சத்து தேவைப்படும். இதில் 50 சதவிகித தழைச்சத்தான 100 கிலோவையும், மணிச்சத்து, சாம்பல் சத்து முழுவதையும் அடி உரமாக இட வேண்டும். மேலும் நடவு வயலில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, நுண்ணுயிரியை எக்டருக்கு 2 கிலோ என்ற அளவில் 50 கிலோ தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். சூடோமோனாஸ் புளூரசன்ஸ் அல்லது டிரோகோடோமோ விதையை எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் 100 கிலோ தொழுஉரத்துடன் கலந்து இட வேண்டும்.

**நடவு :** தயார் செய்த நடவு வயலில் ஒரு மீட்டர் இடைவெளியில் ஒரு கனஅடி அளவுள்ள சிறு குழிகளை எடுக்க வேண்டும். நன்கு ஒட்டு பிடிக்க ஒட்டு கத்தரிகளை இக்குழிகளில் வரிசையாக நட வேண்டும். ஒட்டுச்செடிகளை ஜூன் - ஜூலை, டிசம்பர் - ஜனவரி மாதங்களில் நடலாம்.

**நீர்ப்பாசனம் :** ஒட்டுச்செடியை நடவு செய்த உடனே தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் 7 - 10 நாட்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்ச வேண்டும்.

மேலுரமிடுதல்: நட்ட ஒரு மாதம் கழித்து மீதமுள்ள தழைச்சத்தான 100 கிலோவை விட்டு மண்ணை அணைக்க வேண்டும்.

***தாங்கு குச்சி* :** தோட்டத்தில் நட்ட பிறகு தாங்கு குச்சியை கொண்டு முட்டு கொடுக்க வேண்டும்.

போத்து செடி எடுத்தல்: ஒட்டுக் கட்டிய தலைச்செடியில் ஒட்டுப்பகுதியின் கீழே உள்ள சுண்டைக்காய் செடியிலிருந்து போத்துகள் முளைத்து வரும் அவற்றை ஒவ்வொரு 10 நாட்கள் இடைவெளியில் நீக்க வேண்டும்.

**அறுவடை** : நடவு செய்த 35 -40 நாட்களில் முதல் அறுவடை ஆரம் பிக்கும்.

காய்களை 3-4 நாட்கள் இடைவெளியில் அறுவடை செய்யலாம். ஒரு செடிக்கு சுமார் 10 கிலோ வரை ஆறு மாதங்களில் கிடைக்கும். (தகவல் - முனைவர்கள் தி.சரஸ்வதி, வே.அ.சத்தியமூர்த்தி, சி.தங்கமலை, த.சுமதி, அ.மகாலிங்கம், காய்கறி பயிர்கள் துறை, தோட்டங்கலை கல்லூரி, த.வே.ப.கழகம், கோயம்புத்தூர் -641 008. போன்: 661 1374, 661 1283).

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

<u>**வறட்சியிலும் வளம் தரும் சந்தன மரம்**</u>



சங்கன மரங்களை இங்கியாவின் அனைக்கு பகுகிகளிலும் சுகங்கிரமாக வளர்க்க அரசின் அனுமதி உண்டு. அரசுக்கு சொந்தமான நிலங்களில் வனப்பகுதிகளில் வளரும் சங்கன மரங்களை வெட்டி கடக்குவோர் கண்டிக்கப்படுகின்றனர், தண்டிக்கப்படுகின்றனர். சந்தன மரங்களை வளர்ப்பவர்களை அரசு ஒருபோதும் கண்டிக்கப்படுவகில்லை. வீடுகள், விவசாய நிலங்கள், பள்ளி, கல்லூரி, கொழிற்சாலை வளாகங்கள் என கனியார் பட்டா நிலங்களில் வளர்க்கப்படும் சங்கன மரங்களை அறுவடை செய்கிட வனக்குறையினரிடம் கெரிவிக்க வேண்டும். வனக்குறையினரே அறுவடை செய்கு அருகில் உள்ள வனக்குறையின் சங்கன மரக்கிடங்கில் இருப்பு வைக்கப்படும். மர உரிமையாளருக்கு சங்கன மரக்கட்டைகளின் எடை குறிப்பிடப்பட்ட ரசீகு வழங்கப்படும். பின்னர் நடைபெறும் ஏலத்தில் மர உரிமையாளர் முன்னிலையில் விற்பனை செய்யப்பட்டு வரும் வருமானத்தில் 20 சதவீதம் வனக்குறைக்கும் 80 சதவீதம் மர உரிமையாளருக்கும் வழங்கப்படும். எனவே அனைவரும் அனைக்குப் பகுதிகளிலும் அச்சமின்றி சுதந்திரமாக சந்தன மரங்களை வளர்க்கலாம். இயற்கையாகவே வேலிகளிலும், கரிசு மற்றும் பாறை நிலங்களிலும் கானாகவே வளர்ந்து ஆண்டு முழுவதும் பசுமையாக காட்சி தரும் அழகிய தெய்வீக மரமாகும்.

சந்தன மரங்களை வீடுகள், விவசாய நிலங்கள், கோவில், பள்ளி - கல்லூரி, தொழிற்சாலை வளாகங்கள் என அனைத்து பகுதிகளிலும் சுதந்திரமாக வளர்க்கலாம். விவசாயமாக செய்வதென்றால் 3 மீட்டருக்கு 3 மீட்டர் இடைவெளியில் சிறு குழிகள் அமைத்து ஏக்கருக்கு 450 மரங்களை வளர்க்க முடியும். சந்தன மரங்கள் மற்ற மரங்களுடன் வளரும் தன்மை கொண்டது. எனவே தென்னை, மா, சப்போட்டா, நெல்லி மற்றும் பலவகையான தோட்டங்களில் ஊடுபயிராக வளர்க்கலாம். இரண்டு சந்தன மரங்களுக்கு இடையில் மலைவேம்பு மரங்களை நடவு செய்து அதனுடன் செடி முருங்கை மரங்களையும் வளர்க்கலாம். ஆறு மாதத்தில் செடி முருங்கை மூலம் நல்ல வருமானம் பெறலாம். ஏக்கருக்கு 5 இத்தாலிய தேனி பெட்டிக்களை வைப்பதன் மூலம் மருத்துவம் குணம் மிகுந்த முருங்கைத்தேன் சந்தன தேன் பெற்று நல்ல வருமானம் பெறலாம். எனவே சந்திலும் பொந்திலும் சந்தனம் வளர்ப்போம். முடிந்தால் சந்திர மண்டலத்திலும் சந்தனம் வளர்ப்போம். இந்நாள் இதனை செய்திடுவோம் 2020 அதனை நறுமணமாய் பெற்றிடுவோம். நானிலம் மணக்க மாநிலம் முழுக்க ஒருமனதாய் வளர்த்திடுவோம் சந்தனத்தை சுகவனமாய் அமைத்திடுவோம். இந்திய திருநிலத்தை எளிதாய் அடைத்திடுவோம். ஓசோன் துவாரத்தை இதுவே நமதினிய சுபவார்த்தை இதற்கே நமதுயிர் வாழ்க்கை என செயல்படுவோம். கலாமின் கனவை நிகழ்வாக்குவோம். சந்தனம், சிவப்பு சந்தனம், மலைவேம்பு செடி முருங்கை, வேங்கை மற்றும் பல வகையான வன மர விதைகளும் கால்நடை தீவன விதைகளான அசோலா வேலிமசால் கோ.எப்.எஸ்.29, சவுண்டால் விதைகளும் வளர்ப்புமுறை ஆலோசனைகளும் நேரிலும் தபால் மூலமும் ஆய்வு பண்ணை முகவரியில் பெறலாம். மேலும் விபரங்களுக்கு மொபைல்: 98429 30674 - ஆ.சந்தன மோகன், சந்தன வளர்ச்சி ஆய்வு பண்ணை, பல்லடம், கோயம்புத்தூர் - 641 658.

**<u>வாழைத்தார் விலை கிடு கிடு உயர்வு பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

ப.வேலூர்: திருமண சீஸன் துவங்கி உள்ளதால், வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு பயிரிட்டுள்ள விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. ப.வேலூர் காவிரி கரையோரமான, பொத்தனூர், பாண்டமங்கலம், வெங்கரை, பிலிக்கல்பாளையம், ஜேடர்பாளையம், சோழசிராமணி, அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, பொய்யேரி, குப்புச்சிப்பாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில்,

5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன், மொந்தன் போன்ற ரகங்கள் விளைவிக்கப்படுகிறது. அறுவடை செய்யும் வாழைத்தார்களை, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு வந்து ஏலம் விடுகின்றனர். அவற்றை, கரூர், சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, ராயக்கோட்டை போன்ற பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து வெளியூர்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். நேற்று நடந்த வாழைத்தார் ஏலத்தில், பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை உயர்ந்தது. கடந்த வாரம், 250க்கு விற்பனையான பூவன் வாழைத்தார், நேற்று நடந்த ஏலத்தில், 400 ரூபாய்க்கு ஏலம் போனது. 200க்கு ஏலம் போன ரஸ்தாளி, 300க்கும், 150க்கு விற்பனை செய்யப்பட்ட, கற்பூரவள்ளி, 300க்கும், 200க்கு விலை போன, பச்சநாடன், 420க்கும், ஐந்து ரூபாய்க்கு விற்பனையான, மொந்தன் வாழைக்காய் ஒன்று, எட்டு ரூபாய்க்கும் ஏலம் போனது. தற்போது திருமணம் போன்ற பல்வேறு விசேஷங்கள் துவங்கி உள்ளன. வெளியூரை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்ததால், வாழைத்தார் விலை உயர்ந்தது. இந்த விலை உயர்வு, பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

**நா.பேட்டையில் மஞ்சள் ஏலம்: ரூ.60 லட்சத்துக்கு விற்பனை**

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள் நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர். இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,466 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,240க்கும், குறைந்த பட்சம், 6,369 ரூபாய்க்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,680க்கும், குறைந்த பட்சம், 5,669 ரூபாய்க்கும்

ஏலம்போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 13,500க்கும், குறைந்த பட்சம், 11,039 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

**<u>கோமாரி நோய் தடுப்பூசி திட்ட ஒருங்கிணைப்பு கூட்டம்</u>**

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், தீவிர கோமாரி நோய் தடுப்பூசி திட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. இதில், கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், மூன்று லட்சத்து, 59 ஆயிரத்து, 62 மாடு மற்றும் எருமை இனங்கள் உள்ளன. கால்நடைகளை தாக்கும் கால் மற்றும் வாய் கோமாரி நோயானது, கால்நடைகளை தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது. இதை தடுக்க, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு, ஏழாவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் வரும், செப்டம்பர், 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை நடக்கிறது. இதில், அனைத்து துறையினரும், ஒருங்கிணைந்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பசு மற்றும் எருமையினங்களுக்கு, 100 சதவீதம் தடுப்பூசி வேண்டும். கால்நடை பராமரிப்புத்துறையினர், கோமாரி நோய் தடுப்பூசியின் முக்கியத்துவம் மற்றும் அனைத்து கால்நடைகளுக்கும் விடுப்பு இன்றி, தடுப்பூசி போடுவதன் அவசியம் குறித்தும் விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் எடுத்துரைக்க வேண்டும், என்றார். இதில், டி.ஆர்.ஓ., சங்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**<u>மழை துவங்கியதால் கோமாரிக்கு வாய்ப்பு : மூலிகை மருந்து வழங்க எதிர்பார்ப்பு</u>**

ஈரோடு: மழைக்காலம் துவங்கி உள்ளதால், கோமாரி நோய்களில் இருந்து காக்க, முன்கூட்டியே மூலிகை மருந்து குறித்த விழிப்புணர்வை, கால்நடைத்துறை ஏற்படுத்த வேண்டும், என, விவசாயிகள் தெரிவித்தனர். ஈரோடு மாவட்டத்தில், 3.5 லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. மாடுகளை அதிகளவில் தாக்கும், கோமாரி நோயில் இருந்து காக்க, ஆண்டுக்கு, இரண்டு முறை, தடுப்பூசி போடப்படுகிறது. கடந்தாண்டு, கால்நடைத்துறை மூலம் பரவலாக, ஊசி போடப்பட்டும், விடுபட்ட கால்நடைகளாலும், வெளிமாநிலத்தில் இருந்து சந்தைகளுக்கு கொண்டு வரப்படும் கால்நடைகளாலும், கோமாரி நோய் வேகமாக பரவி, தமிழகம் முழுவதும், 2,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்தன.

கால்நடைத்துறை சார்பில், தடுப்பூசி போடப்பட்டாலும், மாடுசினை பிடிக்காது, அதிக பால் தராது என்று, தவறான மூடநம்பிக்கையால், சில விவசாயிகள், தடுப்பூசி போடுவதில்லை. இதனால், கடந்தாண்டு, நோயை கட்டுப்படுத்த மூலிகை மருந்து வழங்குமாறு, விவசாயிகளுக்கு, கால்நடைத்துறை யோசனை வழங்கியது.

இந்தாண்டு செப்டம்பர் முதல் வாரம் முதல், தடுப்பூசி போட உள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகளை, கால்நடைத்துறை தீவிரமாக செய்து வருகிறது.

இதுகுறித்து கால்நடை வளர்ப்போர் கூறியதாவது:

கால்நடைத்துறை, விவசாயிகளிடம் மூலிகை மருந்தை கால்நடைகளுக்கு வழங்குவது குறித்து, அதிக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மூலிகை உருண்டையை, பாதிக்கப்பட்ட மாட்டின் வாயில் இருபுறமும் வைத்து, நன்றாக மென்று உண்ண செய்ய வேண்டும். மருந்து கீழே சிந்தாமல் இருக்க, வாயை மேல்நோக்கி தூக்கி பிடிக்க வேண்டும். அப்படி செய்யும் போது, மூலிகை மருந்தின் வீரியம், அதன் இதயப்பகுதி வரை சென்று, குணப்படுத்தும். ஒரு நாளைக்கு, மூன்று முதல், ஐந்து முறை வரை, இவ்வாறு மருந்து தயாரித்து அளித்தால், மூன்று நாட்களில் குணமாகும். கால்களில் புண் ஏற்பட்டால், வேப்பெண்ணெய், மஞ்சள் தூள், இரண்டு பூண்டு பல், காட்டுத்துளசி ஆகியவற்றை சேர்த்து, நன்றாக கொதிக்க வைத்து, ஆறியதும், அந்த எண்ணெயை புண்ணில் தடவ வேண்டும். புண்களில் புழுக்கள் வைத்திருந்தால், எண்ணெயுடன் சிறிது கற்பூரத்தை சேர்த்தால், புண்கள், புழுக்கள் மடிந்து, விரைவில் ஆறும். எனவே மழைக்காலம், துவங்கி விட்ட நிலையில், அடுத்த, 15 நாட்களில், கோமாரி நோய், பரவுவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, கிராமசபை மூலமாகவும், நோட்டீஸ் வினியோகித்தும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை, விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, மூலிகை மருந்தை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## சத்தியில் அதிகபட்ச மழை பதிவு

ஈரோடு: சத்தியமங்கலத்தில், அதிகபட்சமாக மழையளவு பதிவாகி உள்ளது. ஈரோடு மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளிலும், கடந்த இரு தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. சத்தியமங்கலத்தில் மிக அதிகபட்சமாக, 96.4 மி.மீட்டர் மழையளவு பதிவாகி உள்ளது. கடந்த, இரு தினங்களாகவே, பரவலாக

மழை பெய்து வருகிறது. கொடிவேரியில்,46, கோபியில்,10, எலந்தகுட்டை மேடு, மூன்று, கவுந்தப்பாடி,5.4, பெருந்துறை,ஆறு, பவானி,12.4, புங்கம்பாடி,மூன்று, ஈரோடு,ஒன்பது, மொடக்குறிச்சி,31, அரச்சலூர்,58, சென்னிமலை,15, சிவகிரி,ஐந்து, முத்தூர்,10, கொடுமுடி,10.4, காங்கேயம்,59.4, பவானிசாகர்,83.2, ரத்துப்பாளையம்,11 மி.மீ., மழையளவு பதிவானது. கடந்த, இரு தினங்களாக பெய்து வரும் மழையால், குளு,குளுவென கால நிலை நிலவுகிறது.

**<u>பச்சைகாய்கறிகள், பாதி பழுத்த பழங்களை உட்கொள்ள வேண்டும்: கருத்தரங்கில் தகவல்</u>**

திண்டுக்கல் : பச்சைகாய்கறிகள், பாதி பழுத்த பழங்களையும் உண்டு வாழ பழகி கொள்ள வேண்டும் என உணவுத்திருவிழாவில் வலியுறுத்தப்பட்டது. திண்டுக் கல்லில் விவசாயத்துறை சார்பில் மாவட்ட அளவிலான உணவுத்திருவிழா கருத்தரங்கம் நடந்தது. வசாய இணை இயக்குனர் சம்பத்குமார் தலைமை வகித்தார். உதவி இயக்குனர் அருள்அரசு வரவேற்றார். ஊராட்சி ஒன்றிய தலைவர் கமலாதேவி, துணை தலைவர் லோகநாதன், கலெக்டரின் நேர்முகஉதவியாளர் கார்த்திகேயன், விவசாய துணை இயக்குனர் தங்கச்சாமி உட்பட பலர் பங்கேற்றனர். பேராசிரியர் சாகுல் அமீது பேசியதாவது: உடலுக்கு தேவையான புரதத்தை அளிக்ககூடியது சிறுதானியங்கள். நாம் மாவு சத்துக்கும், கொழுப்பு சத்துக்கும் அதிகளவு முக்கியத்துவம் தருகிறோம். உடலுக்கு மாவு சத்தும், கொழுப்பு சத்தும் தேவைதான், இது அளவாக இருக்க வேண்டும். அது இல்லாவிட்டால் நம்மால் நடக்க முடியாது. வெயிலை கூட தாங்க முடியாது. ஆனால் அதிகளவு புரத சத்துக்களை உட்கொள்ள வேண்டும். இது நோய் எதிர்ப்பு சக்தியை உடலுக்கு அளிக்கும். பழங்களில் உயிர்சத்து அதிகளவு உள்ளது. சிலர் நன்கு பழுத்த, கசிந்த பழங்களை உண்ணுகின்றனர். குறிப்பாக வாழை பழத்தை கூட கசிந்த பழங்களை சாப்பிடுகின்றனர். பாதியளவு பழுத்த பழங்களை உண்டால்தான் சத்து. பச்சை காய்கறிகளை நாம் அதிகளவு சாப்பிட வேண்டும். காய்கறிகளை பச்சையாக சாப்பிட பழக வேண்டும். பருப்புகள், முளை கட்டிய பயறுகளை சாப்பிடும் போது நமது உடலுக்கு தெம்பு மட்டுமல்லாமல், எளிதாக ஜீரணமாகும். பச்சை காய்கறிகளை சாப்பிட முடியாதவர்கள் குறைந்தது அரை வேக்காட்டில் சாப்பிட வேண்டும். நாம் மசால், உப்புகளை குறைத்து உணவு சாப்பிட்டால், காய்கறி, பழங்கள், கீரைகளில் உள்ள உயிர் சத்துக்கள், நமது உடலுக்கு ஆரோக்கியத்தை தரும். ஆரோக்கியமான உணவுகளை உண்டால்

நோய் நம்மை விட்டு விலகி ஓடும், என்றார். கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு மிளகுதக்காளி சூப், தினை, வரகு, கேழ்வரகு தோசை, உணவு, பூண்டு ஊறுகாய், புதினா சட்னி உட்பட சிறுதானிய உணவுகள் பரிமாறப்பட்டது.

**விவசாயிகளுடன் கலந்துரையாடல்**

தேனி : உத்தமபாளையம் ராயப்பன்பட்டி கிராமத்தில் குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதியாண்டு மாணவிகள் அனுராஜ், ஆதிரை, அன்மாலா, பிரியங்கா, தனலட்சுமி, காவியா, விவிதா, அறிவுமதி, ரீஷ்மா ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ், விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சியை நடத்தினர். பூச்சியியல் துறை கார்த்திகேயன், பயிர்நோயியல் துறை தேவிப்பிரியா, தோட்டக்கலை துறை சிந்துபிரியா ஆகியோர் ராயப்பன்பட்டி கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு தென்னை சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள், பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைகள் ,நோய் கட்டுப்படுத்தும் முறைகள், அதன் அறிகுறிகள் குறித்து விரிவாக விவசாயிகளிடம் கலந்துறையாடினர். 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை வேளாண் உதவி இயக்குனர் ராஜ்மனோகரன், வேளாண் அலுவலர் முருகேசன், படையல் தென்னை விவசாயிகள் சங்க தலைவர் சூசைமணி ஆகியோர் செய்திருந்தனர்.

**வேளாண் பயிற்சி முகாம்**

ஆர்.எஸ்.மங்கலம் : திருப்பாலைக்குடி ஆர்.எஸ்.மங்கலம் வேளாண் துறை சார்பில் மண் பரிசோதனை முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் ராஜாராம் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் உலகுசுந்தரம் வரவேற்றார். மண் மாதிரிகள் , ஊட்டம் ஏற்றிய தொழு உரம் தயாரிப்பு குறித்து மண் பரிசோதனை ஆய்வக வேளாண் அலுவலர்கள் சீதாலட்சுமி, கண்ணன் விளக்கம் அளித்தனர். உதவி வேளாண் அலுவலர் கதிரவன், அண்ணாத்துரை, மேலாளர் ராஜு, தொழில்நுட்ப வல்லுனர் ராம்குமார் ஏற்பாடுகளை செய்தனர். ஊரணங்குடி கிராமத்தில் வேளாண் விரிவாக்க துணை இயக்ககம் சார்பில் "வளங்குன்றா அங்கக வேளாண் பண்ணை பள்ளி' முகாம் நடந்தது. உயிர் உரம், விதை நேர்த்தி குறித்து தொழில்நுட்ப வல்லுனர் ரத்தினக்குமார் விளக்கம் அளித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்னலட்சுமி நன்றி கூறினார். சத்திரக்குடி அருகே மஞ்சக்கொல்லை கிராமத்தில் மானாவாரி நிலங்களுக்கு ஏற்ற ஊட்டம் ஏற்றிய தொழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம் நடந்தது. வட்டார வேளாண் உதவி இயக்குனர் சுருளிமலை தலைமை வகித்தார். பயிர் பாதுகாப்பு மருந்துகள் குறித்து

உதவி வேளாண் அலுவலர்கள் முனியாண்டி, மீனா பயிற்சி அளித்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா, வல்லுனர்கள் சொர்ணகுமார், வேல்முருகன் ஏற்பாடுகளை செய்தனர்.

**திருப்புத்தூரில் மழை: விவசாயிகள் உற்சாகம்**

திருப்புத்தூர் : திருப்புத்தூர் பகுதியில் தொடரும் மழையால், விவசாயிகள் உற்சாகமாகியுள்ளனர். திருப்புத்தூரில் ஆக.16 முதல், நான்கு நாட்களில் 188 மி.மீ.,மழை பெய்துள்ளது.ஆண்டு சராசரி மழையில் இது 20 சதவீதம்.நேற்று முன்தினம் மட்டும் 111 மி.மீ.,மழை சாதனை அளவாக பெய்துள்ளது. தொடர்ந்து நான்கு மணி நேரம் பெய்ததில், மண் குளிர்ந்துள்ளது. இந்த மாதம் 225 மி.மீ., மழை பெய்துள்ளது.கடந்தாண்டு மழை பொய்த்த போதும், ஆகஸ்ட்டில் மட்டும், அதிகபட்சமாக 206 மி.மீ., மழை பெய்தது.மேலும் மழை பெய்யும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் உருவாகியுள்ளது. ஆடிப்பட்டத்தில் விவசாயிகள், விவசாயப்பணிகளை துவக்கவில்லை. வழக்கமாக 15 ஆயிரம் ஏக்கரில் தாலுகா அளவில், விவசாயப்பணி நடைபெறும்.ஆனால், இந்தாண்டு இதுவரை ஆயிரம் ஏக்கருக்கும் குறைவாகவே விவசாயப் பணி துவக்கப்பட்டுள்ளது.கடலை 250 ஏக்கர்,கரும்பு 250 ஏக்கர்,நெல் பயிர் 100 ஏக்கரில் மட்டுமே நடவாகியுள்ளது. தற்போது,தொடரும் மழையால் விவசாயிகள் விவசாயப் பணிகளை துவக்க உள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருச்சியில் 15 செ.மீ மழை கொட்டி தீர்த்தது




திருச்சி: திருச்சியில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணி வரை பெய்த கன மழையால் திருச்சி மாநகரம் வெள்ளக்காடானது. அங்கு 15 செமீ மழை கொட்டி தீர்த்தது. எங்கு பார்த்தாலும் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. பல்வேறு இடங்களில் மரங்கள், மின் கம்பங்கள் சாய்ந்தன. பல இடங்களில் மின்தடை ஏற்பட்டது. திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த வையம்பட்டி அருகே உள்ள நடுப்பட்டியை சேர்ந்தவர் நல்லதம்பி(58). விவசாயி. நேற்றுமுன்தினம் மாலை வெளியில் சென்ற இவர், மீண்டும் வீடு திரும்பவில்லை. குடும்பத்தினர் அவரை தேடினர். அப்போது வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் மழை காரணமாக மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி நல்லதம்பி இறந்து கிடந்தது தெரியவந்தது. வையம்பட்டி போலீசார் விசாரிக்கின்றனர். கரூர் சாலையில் உள்ள அல்லூர் அருகே பெரிய புளியமரம் சாலையில் விழுந்தது. இதனால் சில மணி நேரம் திருச்சி-கரூர் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பஸ்கள் முசிறி வழியாக கரூருக்கு திருப்பி விடப்பட்டது. திருச்சி புறநகர் பகுதிகளான முசிறி, தொட்டியம், துறையூர், மண்ணச்சநல்லூர், லால்குடி போன்ற இடங்களிலும் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணி முதல் 9.30 மணி வரை அடை மழை பெய்தது. கரூர், மாயனூர், குளித்தலை பகுதியிலும் ஓரளவு மழை பெய்தது. தஞ்சை: தஞ்சை நகரில் நேற்றுமுன்தினம்

பரவலாக மழை பெய்தது. பெரம்பலூர் மாவட்டத்தில் மாலை 4 மணி முதல் 7 மணி வரை கனமழை பெய்தது. திருவாரூர், நாகை, புதுகை மாவட்டங்களிலும் மழை இருந்தது. இந்த மழையால் ஆங்காங்கே வயல்களை சீரமைக்கும் பணியிலும் நாற்றங்கால் அமைக்கும் பணியிலும் விவசாயிகள் தீவிரமாக இறங்கி உள்ளனர்.

## நாமக்கல் முட்டை விலை மேலும் 10 காசு அதிகரிப்பு



நாமக்கல் : நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முட்டை விற்பனை தமிழகத்தில் அதிகரித்து வருவதால் முட்டை விலையில் மேலும் 10 காசு உயர்த்தலாம் என பண்ணையாளர்கள், வியாபாரிகள் வற்புறுத்தினர். அதை தொடர்ந்து முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 285 காசில் இருந்து 295 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.இம் மாதத்தின் துவக்கத்தில் ஒரு முட்டையின் விலை 260 காசாக இருந்தது. படிப்படியாக விலை உயர்ந்து தற்போது முட்டை விலை 295 காசாக உள்ளது. முட்டையின் உற்பத்தி செலவை எட்டும் அளவுக்கு முட்டை விலை வந்துள்ளதால் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முட்டைக்கோழி ஒரு கிலோ ரூ.56 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.85 ஆகவும் நீடிக்கிறது.

## துறையூரில் நாளை சின்ன வெங்காயம் ஏலம்

திருச்சி, : துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சின்ன வெங்காயத்துக்கான மறைமுக ஏலம் நாளை (20ம் தேதி) நடைபெற உள்ளதாக திருச்சி வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: திருச்சி வேளாண் விற்பனை குழு சார்பில் துறையூரில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை (புதன்) காலை 11 மணிக்கு சின்ன வெங்காயம் மறை முக ஏலம் நடைபெற உள்ளது. எனவே துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். மேலும், உற்பத்தி செய்த சின்ன வெங்காயத்துக்கு மறைமுக ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் விவசாயிகள் இதில் பங்கேற்று பயனடையலாம் என்றார்.

## மண்ணச்சநல்லூரில் கன மழை

மண்ணச்சநல்லூர், : மண்ணச்சநல்லூர் பகுதியில் நேற்று மாலை கன மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் வெள்ளம் போல தேங்கி நின்றது. எல்எப் ரோடு, கீழ அக்ரகாரம், மேல அக்ரகாரம், காசுக்கடைத் தெரு. சமயபுரம் ரோடு, திருப்பைஞ்சீலி பிரிவு ரோடு, புளிக்காரத்தெரு, கம்மாளத்தெரு உள்ளிட்ட பெரும்பாலான தெருக்களில் ஓடும் மழை நீர் முழுவதும் அக்ரகார பகுதியை ஒட்டியுள்ள மெயின் ரோடு வழியாகச் சென்று பங்குனி வாய்க்காலில் கலக்கும் நிலையில், இந்த வடிகால் குழாயில் நேற்று அடைப்பு ஏற்பட்டது. இதனால் குழாய் வழியாக மழை நீர் செல்ல முடியாமல் சாக்கடையுடன் கலந்து திருச்சி- மண்ணச்சநல்லூர் பிரதான சாலையில் பெருக்கெடுத்து ஓடியது. பங்குனி வாய்க்காலை ஒட்டியுள்ள சாலையில் மழை நீர் இடுப்பு அளவுக்கு பெருக்கெடுத்து ஓடியதால் சாலையானது குளமாக மாறியது. இதனால் அந்த வழியாக

போக்குவரத்து முற்றிலும் முடங்கியது. இருபுறமும் வாகனங்கள் மழை நீரில் தேங்கி நின்றன. இரு சக்கர வாகனங்கள் கூட எங்கும் செல்ல முடியவில்லை. இதனால் பஸ்களில் வந்த பயணிகள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் பலரும் நீண்ட தூரத்தில் இருந்தே பஸ்சில் இருந்து இறங்கி இடுப்பளவு தண்ணீரில் இறங்கி நடந்து சென்றனர். இவ்வாறு மண்ணச்சநல்லூர் பேரூராட்சியின் முக்கிய பிரச்னையாக சாக்கடை மற்றும் மழை தண்ணீர் வடிகால் பிரச்சனை உள்ளது. லேசான மழை பெய்தாலே மண்ணச்சநல்லூர் பகுதியில் அக்ரகாரம் பகுதி, மண்ணச்சநல்லூர் பேரூராட்சி அருகே காந்தி நகர் பகுதி, நமச்சியவாய நகர் பகுதிகளில் உள்ள மெயின்ரோடுகளில் மழை தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது. இதனால் ரோடுகளில் வாகனங்களும் செல்ல முடியவில்லை. பொதுமக்கள் நடந்தும் செல்ல முடியவில்லை. இந்த பிரச்னைக்கு எப்போதுதான் தீர்வு கிடைக்குமோ என்ற ஆதங்கத்தில் பொதுமக்கள் காத்திருக்கின்றனர்.

**தமிழகத்தில் முதல்முறையாக திருச்செந்துறையில் பயன்பாட்டுக்கு வந்த வாழை குளிர்பதன கிடங்கு விவசாயிகளுக்கு நல்ல விலை ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிப்பு**

திருச்சி: தமிழகத் தில் முதல்முறையாக ஸ்ரீரங் கம் திருச்செந்துறையில் பயன்பாட்டுக்கு வந்த வாழை குளிர்பதன கிடங் கால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பது டன் ஏற்றுமதி வாய்ப்பும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் ரஸ் தாளி, பூவன், கற்பூரவள்ளி, நேந்திரன், மலைவாழை, மொந்தன், ரொபஸ்டா போன்ற வாழை ரகங்கள் பயிரிடப்படுகின்றன. வாழை உற்பத்தியில் அறுவடைக்கு பின் செய்நேர்த்தி மற்றும் சந்தை சார்ந்த உற்பத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாததால் உள்நாட்டு சந்தையில் தமிழகம் பின்தங்கிய நிலையில் இருந்தது. அறுவடைக்குபின் ஏற் படும் இழப்பை குறைத்து விவசாயிகள் தங்களது விளைபொருட்களை குறைந்த செலவில் பாது காத்து விற்பனை செய்து லாபம் பெற வேளாண் விற் பனை மற்றும் வணிகத் துறை மூலம் தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் ரூ.4 கோடியில் குளிரூட்டப்பட்ட ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகம் கட்டப்பட்டு தயார் நிலை யில் இருந்தது. இந்நிலையில் இந்த வணிக வளாகம் கடந்த 11ம் தேதி முதல் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பயன்பாட்டுக்கு வந்தது. திருச்சி மட்டு

மில்லாமல் டெல்டா மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான விவசாயிகள் லாரிகளில் 1000 வாழைத்தார்களை கொண்டு வந்து குவித்தனர். இதுதவிர திருச்சி மற்றும் கரூர் மா வட்டங்க ளில் இருந்தும் ஏராளமான வியாபாரிகள் வந்து பொது ஏலம் எடுத்து சென்றனர். இதில் துவங்கப்பட்ட முதல்நாளில் கலெக்டர் ஜெயஸ்ரீ முன்னிலையில் வாழைத்தார் பொது ஏலம் விடப்பட்டன. தஞ்சை மாவட்டம் திருவையாறு வட்டம் வளம்பக்குடியை சேர்ந்த விவசாயி பன்னீர்செல்வம் கொண்டு வந்த 104 வாழைத்தார் தலா ரூ.450க்கு ஏலம் போனது. மொத்தம் ரூ.1,60,695க்கு ஏலம் போனது. ஏலத்துக் கான ஏற்பாடுகளை வேளாண் விற்பனை மற் றும் வணிகத்துறை துணை இயக்குனர் சந்திரசேகரன், அலுவலர்கள் பிரபாகரன், சாக்ரடீஸ் செய்திருந்தனர். இதுகுறித்து துணை இயக்குனர் சந்திர சேகரன் கூறுகையில், தமிழ்நாட்டிலேயே முதல்முறையாக திருச் செந்துறையில் விவசாயிகளுக்காக வாழை குளிர்பதன கிடங்கு கட்டப்பட்டுள்ளது. வணிக வளாகத் தில் வாழைக்கென முன் குளிர்விப்பு வசதியுடன் கூடிய 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறை, வாழைதார்களை கழுவி தரம் பிரி த்து சிப்பம் கட்டுதல், பரிவர்த்தனை கூடம், வணிகர்களுக்கான கடைகள், சாலை, சுகாதார வசதியு டன் கூடி பொதுகட்டமைப்பு மற்றும் தடையி ல்லா மின்சாரம் கிடைக்க மின் உருவாக்கியுடன் கூடிய வசதிகள் உள்ளன. அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பு குறைக்கப்பட்டு தரம் பிரித்து வகைப்படுத்தி மதிப்புகூட்ட ஏதுவாகிறது. நல்ல விலை கிடைப்பதுடன் ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிக்கவுள்ளது. திருச்சி மட்டுமல்லாமல் டெல்டா மாவட்டங்களில் இருந்தும் கூட அறுவடை செய்த வாழைகளை விவசாயிகள் கொண்டு வந்து பயனடையலாம் என்றார்.மாதம் கட்டணம் ரூ.1 மேலும் சந்திரசேகரன் கூறுகையில், வியாபாரிகள் மத்தியில் பொது ஏலம் விடப்படுகிறது. இதற்கு கட்டணம் ஏதும் செலுத்த தேவையில்லை. பொது ஏலத்தில் விலை குறைவாக இருப்பின் விவசாயிகள் இங்குள்ள 1000 மெ.டன் வரை இருப்பு வைத்து கொள்ளலாம். இதற்கு கட்டணமாக மாதம் ஒன்றுக்கு கிலோ வுக்கு ரூ.1 செலுத்த வேண்டும். இந்த வசதி யால் அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்பு குறைக்கப்பட்டு வாழைத்தார்க ளின் மதிப்பு கூட்டப்படுகிறது. இந்த பொது ஏலம் ஒவ்வொரு வாரம் புதன்கிழமையும் நடைபெறும் என்றார்.

விவசாயி

ஆச்சர்யம்...

திருக்காட்டுப்பள்ளி வளப்பக்குடியை சேர்ந்த விவசாயி பன்னீர்செல்வம் கூறுகையில், முதல்நாளில் 104 தார்களை ஏலத்துக்கு கொண்டு வந் தேன். ஒருதார் குறைந்தது ரூ.300க்கு தான் ஏலம் போகும் என்று நினைத்திருந்தேன். தற்போது ரூ.450க்கு ஏலம் போனது மகிழ்ச்சியளிக்கிறது. வெளிமார்க்கெட்டுக்கு கொண்டு சென்றால் கமி ஷன் கொடுக்க வேண்டும். இங்கு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா கிடை ப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

**விதை பரிசோதனையால் அதிக மகசூல் பெறலாம்இணை இயக்குனர் தகவல்**

திருச்சி, : தரமான விதையா என்று பரிசோதனை செய்து விவசாயம் செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு கோவை விதைச்சான்று இணை இயக்குனர் அறிவுரை வழங்கினார். திருச்சி வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் விதை பரிசோ தனை நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு சான்று விதை மாதிரிகள், ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் பணிவிதை மாதிரிகள் ஆகிய 3 விதமான விதைமாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. விதைகளின் முளைப்புத்திறன், விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் பிறரக கலப்பு போன்ற விதை பரிசோதனைகளை உள்ளடக்கியதாகும். சான்று விதை மற்றும் ஆய்வாளர் விதை மாதிரிகளுக்கு கட்டணம் வசூலிப்பது இல்லை. இவை விதைச்சான்று மற்றும் விதை ஆய்வு (அரசுத்துறை) அலுவலர்களால் பரிசோதனைக்கு அனுப்பப்படுவதால் இதற்கான கட்டணத்தை அரசே ஏற்று கொள்கிறது. பணி விதை மாதிரிகள் தனியார் விதை விற்பனையாளர்கள், தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தாங்களாகவே முன்வந்து பரிசோதனைக்கு அனுப்புவதாகும். இதற்கு மட்டும் ஒரு விதை மாதிரி பகுப்பாய்வு செய்ய ரூ.30 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மேலும் பகுப்பாய்வு முடிந்த விதை மாதிரிகள் அனைத்தையும் (15 டிகிரி செல்சியஸ், 50 சதவீதம் ஆர்ஹெச்) சீதோஷ்ண நிலையில் குளிப்பதன வசதி கொண்ட காப்புவிதை மாதிரிகள் அறையில் சேமித்து வைக்கப்படுகிறது.

இந்த விதை பரிசோ தனை நிலையத்தில் கோவை விதைச்சான்று இணை இயக்குனர் பழனி சாமி நேற்று ஆய்வு செய் தார். விதை பரிசோதனை நிலையத்தில் உள்ள முளைப்பு திறன் அறை மற்றும் காப்பு விதை மாதிரிகள் சேமிப்பு அறையை பார்வையிட்டார். இதில் சான்று மற்றும் பணி விதை மாதிரிகள் 3 மாத காலத்துக்கும், ஆய்வாளர் விதை மாதிரிகள் 6 மாத காலத்துக்கும் சேமித்து வைக்கப்படுவது, விதை பரிசோதனை நிலைய செயல்பாடு குறித்து விதை பரிசோதனை அலுவலர் ரவி விளக்கம் அளித்தார். ஆய்வின்போது திருச்சி விதைச்சான்று உதவி இயக்குனர் எழில் அரசு, அலுவலர்கள் மனோன்மணி, ஜெயராணி மற்றும் ஆய்வக உதவியாளர் ரவிச்சந்திரன் உடனிருந்தனர். ஆய்வுக்கு பின்னர் இணை இயக்குனர் பழனிசாமி கூறுகையில், அலுவலர்கள் அவர்களது கடமையை செவ்வனே செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைக்க வழிவகை செய்யலாம். அதிகமான மகசூலுக்கு அடிப்படை ஆதாரம் தரமான விதையாகும். தரமான விதைகளை கண்டறிவதற்கு விதை பரிசோதனை மிகவும் அவசியம். எனவே தற் போது சம்பா பருவ சாகுபடி செய்வோர் மற்றும் மானாவாரியில் பருத்தி, மக்காச்சோளம் மற்றும் இதர பயிர்கள் பயிரிடும் அனைத்து விவசாயிகளும் தங்களிடமுள்ள விதைகளை பரிசோதனை செய்து விவசாயம் செய்தால் அதிக மகசூல் பெறலாம் என்றார்.

**<u>நேரடி நெல் விதைப்புக்கு லேசர் இயந்திரம் மூலம் நிலத்தை சமன்படுத்த வேண்டும் விவசாயிகளுக்கு வேண்டுகோள்</u>**

திருவாரூர்,: திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள் மகசூல் அதிகமாக பெற லேசர் இயந்திரம் மூலம் நிலத்தை சமன்படுத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் இயந்திர முறையில் நேரடி நெல் விதைப்பு பணிகளை மேற்கொள்வது குறித்து அனைத்து கிராமங்களிலும் நேரடி செயல் விளக்கம் கடந்த 9ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. 23ம் தேதி வரை 15 நாட்களுக்கு நடை பெறும் இந்த நேரடி செயல் விளக்க முகாமில் சாகுபடி பணிகளை மேற்கொள்வது குறித்து விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.இதன்படி நன்னிலம் அருகேயுள்ள சொரக்குடியில் இயந்திர முறை நேரடி நெல் விதைப்பு பணியினை

நேற்று கலெக்டர் மதி வாணன் பார்வையிட்டார். பின்னர் விவசாயிகளிடம் கலெக்டர் கூறியதாவது, திருவாரூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடி 3 லட்சத்து 2 ஆயிரத்து 38 ஏக்கரிலும், தாளடி பயிர் 64 ஆயிரத்து 888 ஏக்கரிலும் என மொத்தம் 3 லட்சத்து 66 ஆயிரத்து 296 ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு லட்சத்து 91 ஆயிரத்து 178 ஏக்கரில் நேரடி நெல் விதைப்பு பணி மேற்கொள்ளப்பப்படவுள்ளது. நேரடி விதைப்பில் ஈடுபடும் விவசாயிகள் லேசர் இயந்திரம் மூலம் நிலத்யை முதலில் நன்கு சமன்படுத்தி கொண் டால் மகசூல் அதிகமாக கிடைக்கும். நிலத்தை சமன்படுத்துவதால் சாகுபடிக்கு தேவையான நீர் குறைவாக தேவைப் படும். மேலும் ஏக்கர் ஒன்றுக்கு 12 கிலோ விதை நெல் போதுமானதாகும். கோனோவீடர் இயந்திரம் மூலம் களையெடுப்பு பணிகளை மேற்கொள் ளும் போது திருந்திய நெல் சாகுபடி போன்று பயிர்கள் நன்றாக தூர்விட்டு வளர்ந்து நல்ல மகசூல் கிடைக்கும். எனவே இயந்திர முறை குறித்து இந்த செயல்விளக்கத்தை விவசாயிகள் நன்கு அறிந்து அதற்கேற்ப சாகுபடி பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். ஆய்வின் போது எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி பரசுராமன், ஆலோசகர் பழனியப்பன், வேளாண்மை துறை இணை இயக்குநர் மயில்வாகனன், துணை இயக்குநர் நடேசன், நன்னிலம் ஊராட்சி ஒன்றிய தலைவர் சம்பத் மற்றும் பலர் இருந்தனர்.

**<u>நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில் அதிக மகசூல் பெறலாம்வேளாண் அதிகாரிகள் விளக்கம்</u>**

புதுக்கோட்டை, : ஆலங்குடியை அடுத்த வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆடிப்பட்ட சாகுடி பயிர் நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண் அறிவியல் நிலையத்தின் தலைவர் ஞான மலர் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத் தார். பேராசிரியர் மதியழகன் வரவேற்றார். வம்பன் அறிவியல் நிலையத் தலை வர் ஞானமலர் பேசுகையில், தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய்வித்துப் பயிர்களில் நிலக்கடலை,

எள், ஆமணக்கு, சூரியகாந்தி முக்கிய பயிர்களாக விளங்குகின்றன. எண்ணெய்வித்துப் பயிர்கள் தமிழகத்தில் மானாவரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன. குறைந்த இடுபொருள் செலவு, வளம் குறைந்த நிலப்பகுதி மற்றும் பூச்சி, நோய் தாக்குதலுக்கு உள்ளாவதால் எண்ணெய் வித்து பயிர்களின் விளைச்சல் மிக குறைவாக வே காணப்படுகின்றது. தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் எண்ணெய் வித்துப் பயிர்களில் நிலக்கடலை ஒரு முக்கிய பயிராகும். இப்பயிர் தமிழ்நாட்டில் 4.13 லட்சம் எக்டர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு 8.9 டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. எண்ணெய் வித்து உற்பத்தி கடந்த சில ஆண்டுகளாக பின்னடைவு ஏற்பட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள் ளது. இந்த நிலையில் சந்தை யில் நிலவும் விற்பனை வாய்ப்பினை பயன்படுத்தி நிலக்கடலை உற்பத்தியை பெருக்கி உழவர்கள் அதிக லாபத்தை பெறமுடியும். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையை கையாளுவதன் மூலம் மகசூல் இழப்பு ஏற்படாமல் அதிக மகசூல் பெறமுடியும் என்றார். பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் சாமிநாதன் பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கிப் பேசுகையில், நிலக்கடலையை தாக்கும் பூச்சிகளில் சிகப்பு கம்பளிப்புழு, படைப்புழு அல் லது வெட்டுப்புழு, சுருள் பூச்சி ஆகியவை முக்கியமானவையாகும். இவற்றை ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு முறையில் எளி தாக கட்டுப்படுத்தலாம். இவற்றில் சிவப்புக் கம்பளிப்புழுவை கட்டுப்படுத்த முதலில் கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழ லான இடங்களிலும் மண் ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய் வதன் மூலம் அழிக்கலாம். மானாவாரிப் பயிர்களில் விதைப்புக்கு பிறகு, மழைக்குப்பின் விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். ஊடுபயிராக துவரை, மற்றும் தட்டைப்பயிர்களை பயிர்செய்வதன் மூலம் இளம் பருவ புழுக்கள் உள்ள கண்ணாடி போன்று தாக்கப்பட்ட இலைகளை சேகரித்து அழிக்கலாம் என்றார். மேலும் நிலக்கடலையை பாதிக்கும் நோய்களில் முக்கியமானது வேர் அழுல் நோய் அல்லது அஸ்பர்ஜில்லஸ் கழுத்து அழுகல் நோய் பாதிக்கப்பட்ட செடி அழுகி காணப்படும், தண்டும், வேர்பகுதியும் சேரும் இடத்தில் கருப்பு அல்லது பச்சை

நிறமுடைய பூஞ்சானம் தென்படும். இந்நோய் விதைத்த 15 முதல் 30 நாட்களில் இலை மஞ்சள் நிறமடைந்து வாடி, பாதிக்கப்பட்ட செடியின் வேர் அழுகி காணப்படும். இந்நோய் ஆடிப்பட்ட பருவத்தில் அதிகமாக தென்படும். இந்நோயைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட செடியை வயலில் இருந்து அப்புறப்படுத்தவும். பயிர் சுழற்சி முறையை கையாள வேண்டும் என உதவி பேராசியர் மதியழகன் கூறினார். இப்பயிற்சியில் நிலக்கடலை விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் டிரைக்கோடெர்மா விரிடி (4கிராம் ஒரு கிலோ விதைக்கு) என்ற எதிர் உயர் நுண்ணுயிரியை கொண்டு விதை நேர்த்தியை செயல் விளக்கமாக மதியழகன் செய்து காண்பித்தார். மேலும் இப்பயிற்சியில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், பண்ணை மகளிர் புதுகை மாவட்டத்தில் பல்வேறு வட்டாரங்களில் இருந்து கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

**<u>வம்பனில் இன்று உளுந்து சாகுபடி பயிற்சி விவசாயிகள் பங்கேற்க அழைப்பு</u>**

புதுக்கோட்டை, : ஆலங்குடியை அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் உளுந்து சாகுபடி குறித்த ஒருநாள் பயிற்சி இன்று நடக்கிறது. இது குறித்து வம்பன் அறிவியல் நிலையத் தலைவர் ஞானமலர் விடுத்துள்ள செய்தி குறிப்பு: நமது உணவுப் பழக்கவழக்கத்தில் பயறு வகைகள் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. பயறு வகைகளை சேர்த்தால்தான் எந்த ஒரு உணவும் முழுமை பெற்ற உணவாகும். கார ணம் புரதத்தின் அளவு தா னியப் பயிர்களின் புரத்த தை ஒப்பிடுகையில் 2 முதல் 3 மடங்கு அதிகம் பயறு வகைப் பயிரிகளில் காணப்படுகிறது. தமிழ்நாட்டில் பயறுவகைப் பயிர்கள் 5.25 லட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 2 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. குறிப்பாக உளுந்து பயிர் 2.15 லட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு சராசரி மகசூலாக 328 கிலோதான் எக்டருக்கு பெறமுடிகிறது. இந்தியாவின் சராசரி மகசூலான எக்டருக்கு 532 கிலோவைக் காட்டிலும் இது குறைவு. இதற்கான காரணங்களாக வளமற்ற நிலங்களில் சாகுபடி செய்தல், சரியான பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்காமை, களை களைக் கட்டுப்படுத்தாமை மற்றும் சமச்சீரற்ற உர மே

லாண்மை ஆகிவையாகும். இதுபோன்ற பிரச்னை களை நீக்கி உற்பத்தி திற னை அதிகரிக்க சரியான ர கங்களை சரியான நேரத்தில் களை மற்றும் உரமேலா ண்மை மற்றும் பூ பூக்கும் திறனை அதிகரித்து பூ உதிர் வதை தடுப்பதற்கான தொழில் நுட்பங்களை தெரிந்துகொள்ள ஒரு நாள் இலவச பயற்சியானது. இன்று (19ம் தேதி) காலை 10 மணிக்கு வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மையத்தில் நடைபெறுகிறது. எனவே விவசாயிகள் இப்பயிற்சியில் பங்கேற்று கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**<u>இயற்கை வேளாண்மையில் மண்வளத்தை காப்பது எப்படி? வேளாண்மைத்துறை மாணவிகள் விளக்கம்</u>**

உத்தமபாளையம், : இயற்கை உரத்தை பயன்படுத்துவதன் மூலம் மண்வளம் கெடாமல் பாதுகாப்படி எப்படி என்று குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள், விவசாயிகளுக்கு விளக்கினர். உத்தமபாளையம் அருகே ராயப்பன்பட்டியில் இயற்கை வேளாண்மை பற்றிய விளக்க முகாமை, குள்ளப்புரம்வேளாண்மைதொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ஏற்பாடு செய்து இருந்தனர். முகாமிற்கு தென்னை விவசாயிகள் சங்க தலை வர் சூசைமணி தலைமை தாங்கினார். இதில் காய் கறி, நெல், தென்னை, உள்ளிட்ட விவசாயத்தில் ஈடுபடுவோர் மண்வளம் காக் கவும், இயற்கையிலேயே நோய் தாக்கும் பூச்சிகள், மற்றும் பயிர்களை நோய் தாக்குதலில் இருந்து காக்கவும், இயற்கை வேளாண் மையில் பஞ்சகாவ்யம் தயாரிக்கும் முறையை மாணவிகள், அனராஜ், ஆட்லின், மணிமாலா, பிரியங்கா, தனலட்சுமி, வினிதா, காவியா, அறிவுமதி, கினிஷ்மா, ஆகியோர் விவசாயிகளுக்கு விளக்கிக்காட்டினர். இதுகுறித்து மாணவிகள் கூறுகையில், ‘இயற்கையான உரங்களால் மண்வளத்தை பாதுகாக்க முடியும். அதிகமான வீரியம் கொண்ட உரங்களால் மண்வளம் கெட்டுவிடும். இதனால், விவசாயமே செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். எனவே அதிக செலவு இல்லாமல் தங்களிடம் கிடைக்கும் இயற்கையான பொருட்களை கொண்டு பஞ்சகாவியம் (இயற்கை உரம்) தயார் செய்து அதனை விவசாயத்திற்கு பயன்

படுத்தலாம். பஞ்சகாவியம் தயாரிக்க மாட்டுச்சாணம், கோமியம், பால், தயிர், நெய் உள்ளிட்ட பொருட்கள் வேண்டும். இதனை 1:4:3:2:1 விகிதத்தில் கலந்து இளநீர் அல்லது வெள்ளம், அல்லது வாழைப்பழத்துடன் நொதிக்க வைக்கவேண்டும். 20 நாட்கள் வரை நொதிக்க வைத்த பின்பு இயற்கை உரமான பஞ்சகாவியம் கிடைக்கும். இதனை விவசாயிகள் நிலங்களில் தெளிக்கும்போது, இயற்கை அங்கக உரமாக மாறி எந்தவிதமான நோய் தாக்குதல், பூச்சி தாக்குதல் உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து பாதுகாத்து கொள்ளலாம்' என்றனர். முகாமில் ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டியை சேர்ந்த விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**சாத்தூரில் இடியுடன் கனமழை**

சாத்தூர், : சாத்தூரில் நேற்றுமாலை இடியுடன் கனமழை பெய்ததால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விருதுநகர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டதால் விவசாய நிலங்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் வறண்ட நிலையில் காணப்படுகிறது. மழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் குறை ந்து சாத் தூர் மற்றும் சுற்று ப்புற கிராமங்களில் கடும் குடிநீர் தட்டுப் பாடு நிலவி யது. இந்த ஆண்டு பருவமழையை எதிர்பார்த்து பொதுமக்கள் காத்திருந்தனர். கடந்த நான்கு நாட்களாக சாத்தூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட் டது. இந்நிலையில் சாத் தூரில் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் இடியுடன் கன மழை பெய்தது. இதனால் சாலை களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தேசிய நெடுஞ்சாலையில் வாறுகால் மராமத்து செய்யப்படாததால் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. மழை காரணமாக சாலையில் இருள் சூழந்து காணப்பட்டதால் வாகனங்கள் முகப்புவிளக்கை எரிய விட்டு சென்றன. நேற்றுமாலை சுமார் 3மணிக்கு தொடங்கி 4மணிவரை மழை பெய்தது.

## ஆவணி பட்ட பருவ மழையால் உழவார பணிகளில் விவசாயிகள் தீவிரம்

சிவகாசி, : சிவகாசி ஒன்றிய பகுதியில் கடந்த இரண்டு தினங்களாக ஆவணி பட்ட பருவ மழை பெய்து வருவதால் விவசாயிகள் உழவார பணிகளில் தீவிரம் காட்ட துவங்கியுள்ளனர். சிவகாசி ஒன்றிய பகுதியில் 27 ஆயிரத்து 294 ஹெக்டேர் புஞ்சை, ஆயிரத்து 328 ஹெக்டேர் நஞ்சை நிலத்தில் பயிர் சாகுபடி பணிகள் நடைபெறுகிறது. கடந்த ஆண்டுகளில் மழை டஇல்லாததால் விவசாய பணிகள் சரிவர நடைபெறவில்லை. இந்நிலையில் தற்போது கடந்த இரண்டு நாட்களாக ஆவணி பட்ட பருவ மழை பரவலாக பெய்து வருகிறது. சிவகாசி ஒன்றியம் எரிச்சநத்தம், புதுப்பட்டி, கொத்தனேரி, கவுண்டன் பட்டி, வெம்பக்கோட்டை ஒன்றி யம் பேர்நாயக்கன் பட்டி, வெம்பக்கோட்டை, கோட்டைப்பட்டி, ஏழாயிரம்பண்ணை போன்ற கிராம பகுதிகளில் நல்ல மழை பெய்துள்ளது. இத னால் இப்பகுதி விவசாயிகள் உழவார பணியில் தீவிரமாக ஈடுபட்டு வரு கின்றனர். கடந்த ஆண்டு இப்பகுதியில் 1100 ஹெக்டேர் பரப்பு நிலத்தில் வெறும் 283 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே நெல் சாகுபடி பணிகள் நடைபெற்றது. இதே போன்று சிறு தானிய பயிர்கள் ஆயிரத்து 880 ஹெக்டேர், பயறு வகைகள் 262 ஹெக்டேர், பருத்தி 300 ஹெக்டேரிலும், எண்ணெய் வித்து பயிர் 103 ஹெக்டேர், கரும்ப் 45 ஹெக்டேரிலும் சாகுபடி பணிகள் நடைபெற்றது. சாகுபடி பணியில் பாதிப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யாததால் வேளாண் துறையினர் சாகுபடி இலக்கையும் எட்ட முடியவில் லை. இந்நிலையில் தற்போது ஆவணி மாத துவக்கத்தில் கடந்த இரண்டு நாட்களாக நல்ல மழை பெய்து வருவதால் விவசாயிகள் உழவார பணியில் தீவிரம் காட்ட துவங்கியுள்ளனர்.

இது குறித்து விவசாயி குருசாமி கூறுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை சரிவர பெய்யவில்லை. தற்போது ஆவணி மாத துவக்கத்தில் நல்ல மழை பெய்து வரு கிறது. ஆவணி மாத துவக்கத்தில் மழை பெய் தால் ஆண்டு முழுவதும் நல்ல மழை பெய்யும் என்பது விவசாயிகளின் நம்பிக்கை. இந்த ஆண்டு தென்

மேற்கு பருவ மழை சரிவர பெய் யாமல் பொய்த்து விட்ட நிலையில், ஆவணி பட்டத்தில் மழை பெய்ய துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார்.

## விதை நெல் மூட்டைகள் அதிக விலைக்கு விற்பனை

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் உள்ள விவசாயிகள், வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால், வீராணம் ஏரி ஆகியவற்றின் மூலம் பாசனம் பெற்று விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது கல்லணை திறக்கப் பட்டுள்ளதால் விவசாயிகள் பணிகளை தொடங்கியுள்ளனர். இந்த பகுதியில் வேளாண்துறை சார்பில் அதிக விலையில் விதை நெல் மூட்டைகள் விற்பனை செய்யப்படுவதால், விவசாயிகள் தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் விதை நெல் மூட்டைகளையே வாங்கி செல்கின்றனர். இதை கருத்தில் கொண்டு தனியார் கடைகளில் விற்பனையாளர்கள் ஒவ்வொரு கடைக்கு ஒரு விலை என விற்பனை செய்கின்றனர். இதுபற்றி கேட்டால் முறையான பதிலை கூறு வதில்லை. இதில், வேறு வழியில்லாமல் விவசாயிகள் அதிக விலை கொடுத்து விதை நெல் வாங்கி செல்கின்றனர். எனவே, விதை நெல் விற்பனை செய்யும் கடைகளில் நெல் மூட்டை விலைகளை அறிவிப்பு பலகையில் குறித்து வைக்க வேண்டும். அனைத்து விதை நெல் மூட்டைகளுக்கும் கண்டிப்பாக ரசீது வழங்க வேண்டும் என அதிகாரிகள் உத்தரவிட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## பெரம்பலூரில் 21ம்தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி நடைபெறவுள்ளது என கலெக்டர் தரேஸ்அகமது தெரி வித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் வரும் 21ம் தேதியன்று காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டஅரங்கில் நடைபெறுகிறது. கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக நீர்பாசனம், கடனுதவிகள்,

வேளாண் இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படவுள்ளது. விவசாயிகள் அன்றைய தினம் நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**<u>திறந்தவெளி கிணறு இருந்தால் மானிய விலை சோலார் பம்ப்ஷெட் வேளாண்மைத்துறை வழங்குகிறது</u>**

நெல்லை. : திறந்தவெளி கிணறு வைத்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் சோலார் மின் பம்ப் ஷெட்டை வேளாண்மைத்துறை வழங்குகிறது. தற்போதைய காலகட்டத்தில் மின்சார தட்டுப்பாடு உள்ள சூழலில் விவசாயிகள் போதிய மின் இணைப்பு பெறமுடியாமல் விவசாய பணிகளுக்கு இடையூறு ஏற்படுகிறது. இந்தப் பிரச்னையிலிருந்து விடுபட்ட சூரிய ஒளியின் சக்தியால் (சோலார்) இயங் கும் பம்ப் ஷெட்டுகள் வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. திறந்தவெளி கிணறு வைத்துள்ள விவசாயிக ளுக்கு ரூ.5 லட்சத்து ஆயி ரத்து 512 மதிப்புள்ள 5 ஹைச் பி திறன் கொண்ட சூரிய சக்தி பம்ப் ஷெட் ரூ.3 லட்சத்து 84 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் உரிய விண்ணப்ப படிவத்து டன் பட்டா, சிட்டாஅடங்கள், நிலவரை படம், குடும்ப அட்டைநகல், புகைப்படம் மற்றும் நிலபக் கிர நகல் ஆகியவற்று டன் வள்ளியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்புகொள் ளலாம் என வள்ளியூர் வட் டார வேளாண்மை உதவி இயக்குனர் ஜோ தேடிஸ் அறிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>புள்ளம்பாடி வாய்க்காலுக்கு மானோடை ஏரியிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு</u>



திருமானூர் ஒன்றியத்திலுள்ள புள்ளம்பாடி வாய்க் காலுக்கு மானோடை ஏரியிலிருந்து பாசனத் திற்காக துரை.மணிவேல் எம்.எல்.ஏ. தண்ணீர் திறந்து வைத்தார்.

பாசனவசதி

புள்ளம்பாடி வாய்க்கால் முக்கொம்பிலிருந்து திருமானூர் ஒன்றியம் காமரசவல்லி சுக்கிரன் ஏரி வரை சுமார் 90 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. புள்ளம்பாடி வாய்க்காலில் சுமார் 22 ஆயிரத்து 114 ஏக்கர் பாசனபரப்பு கொண்ட தாகும். புள்ளம்பாடி வாய்க்கால் திருச்சி மாவட்டத்தில் 7 ஆயிரத்து 114 ஏக்கரும், அரியலூர் மாவட்டம் திருமானூர் ஒன்றியத்தில் 15 ஆயிரம் ஏக்கரும் பயன் பெறுகிறது. இந்நிலையில் மேட்டூர் அணையில் தண்ணீர் மட்டம் 100 அடிக்கு மேல் தாண்டிய நிலையில் தமிழக முதல்–அமைச்சரின் ஆணைக்கினங்க கடந்த 10–ந்தேதி மேட்டூர் அணையி லிருந்து புள்ளம்பாடி வாய்க் காலுக்கு தண்ணீர் திறக்கப்

பட்டது. இந்த தண்ணீர் முக்கொம்பை வந்தடைந்து அங்கிருந்து கடந்த 15–ந் தேதி திறக்கப்பட்டு 16–ந் தேதி திருமானூர் ஒன்றியம் பளிங் காநத்தம் மானோடை ஏரிக்குவந்தடைந்தது.

தண்ணீர்திறப்பு

ஏரி நிரம்பிய நிலையில் திருமானூர் ஒன்றிய த்திலுள்ள புள்ளம்பாடி வாய்க்கால் பாசனத்திற்காக மானோடை ஏரியிலிருந்து தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு துரை.மணிவேல் எம்.எல்.ஏ. தலைமை வகித்து மதகுகளின் சாவியை திருகி பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு புள்ளம்பாடி பொதுப் பணித்துறை பாசன வாய்க்கால் உதவி செயற் பொறியாளர் சரவணன், உதவி பொறி யாளர்கள் ராம லிங்கம், சுகுமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தர்ராஜ், ஒன்றிய கவுன்சிலர் சாமி நாதன், துணைத்தலைவர் சாந்தகுமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் கண்ட ராதித்தம் தில்லை திருவாசகம், கீழக்குளத்தூர் மோகன், காமரசவல்லி, சிவாலிங்கம், சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் அக்பர்ஷரீப் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>கொள்ளிடம் ஆற்றில் ரூ. 400 கோடியில் கதவண கட்டப்படும் இடத்தை தலைமை பொறியாளர் ஆய்வு</u>



காட்டுமன்னார்கோவில் அருகே கொள்ளிடம் ஆற்றில் ரூ.400 கோடியில் கதவணை கட்டப்பட உள்ள இடத்தை தலைமை செயற்பொறியாளர் செல்வம் ஆய்வுசெய்தார்.

கலெக்டர்ஆய்வு

காட்டுமன்னார்கோவில் அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஆதனூர் கிராமத்துக்கும், நாகை மாவட்டம் குமாரமங்கலம் கிராமத்துக்கும் இடையே ரூ.400 கோடி செலவில் கதவணையுடன் கூடிய பாலம் கட்டப்படும் என சட்டசபையில் தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.அதன்படி சென்னை பொதுப்பணித்துறை தலைமை செயற்பொறியாளர் செல்வம் (விரிவாக்க திட்டம்), கடலூர் மாவட்ட கலெக்டர் சுரேஷ்குமார் ஆகியோர் நேற்று காலை கொள்ளிடம் ஆற்றில் ஆதனூர் பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது அணை கட்டுவது பற்றி இறுதிகட்ட வடிவமைப்பு குறித்து வரைபடங்கள் உதவியுடன் அதிகாரிகளுடன்ஆலோசனைநடத்தினர்.

10அடிஉயரம்

பின்னர் தலைமை செயற்பொறியாளர் செல்வம் (விரிவாக்க திட்டம்) நிருபர்களிடம் கூறுகையில், ‘தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா, கொள்ளிடம் ஆற்றில் கதவணை அமைக்க ரூ.400 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்கான இறுதி கட்ட வடிவமைப்பு பணிக்காக ஆய்வு மேற்கொண்டோம். இந்த கதவணை கட்டப்படுவதால் 10 கி.மீ. தொலைவுக்கு 10 அடி உயரத்துக்கு தண்ணீர் தேக்கிவைக்க வாய்ப்புள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீர்மட்டம் உயரும். விவசாயம் சிறப்பாக நடைபெறும்.‘ என்றார். ஆய்வின்போது ஒன்றியக்குழு தலைவர் மணிகண்டன், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் பன்னீர்செல்வம், செயற்பொறியாளர் ராமமூர்த்தி, உதவி செயற்பொறியாளர்கள் கண்ணன், அய்யம்பெருமாள், உதவி பொறியாளர் ரமேஷ், தாசில்தார் பாலகிருஷ்ணன் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**காங்கயத்தில் பலத்த மழை எதிரொலி: சோளம் விதைப்பு செய்யவிவசாயிகள் தீவிரம் விலை கிடு கிடு உயர்வு**



காங்கயம் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை மற்றும் இரவு நேரத்தில் பலத்த மழை பெய்தது நேற்று முன்தினம் மட்டும் காங்கயத்தில் 59.4 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது. காங்கயம் மற்றும் சுற்று வட்டாரப்பகுதியில் பரவலாக பெய்த இந்த மழை விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. பல மாதங்களாக மழை இல்லாமல் வறண்டு காய்ந்து கிடந்த பூமி இந்த மழையினால் குளிர்ந்துள்ளது. மேலும் மேய்ச்சல் நிலங்களில் புல்கள் முளைக்க ஏதுவாக உள்ளது. இதனால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் ஓரளவு நிம்மதி அடைந்துள்ளனர். அதே சமயம் இன்னும் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் மானாவாரி நிலங்களில் கால்நடை தீவனத்திற்காக சோளம் விதைக்க தீவிரம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக கடைவீதியில் உள்ள தானிய மண்டிகள் வியாபாரத்தில் சுறுசுறுப்பு அடைந்துள்ளது. விதைப்பு சோளம் வாங்க கிராமங் களில் இருந்து விவசாயிகள் தானிய மண்டிகளில் குவிந்துள்ளனர். இதன் காரணமாக விதைப்பு சோளமான மஞ்சள் சோளம் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம் 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மஞ்சள் சோளம் ரூ.2,300–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று மூட்டைக்கு ரூ.500

அதிகரித்து ரூ.2,800 வரை விற்பனை செய்யப்பட்டது. இன்னும் மழை தொடர்ந்து பெய்தால், இதன் விலை மேலும் உயரும் என விவசாயிகள் தெரிவித்தனர்.